# புகை எச்சரிக்கை மணி: அது சட்டப்படியானது

உங்கள் வீட்டில் தீப்பற்றிக்கொண்டால்... வெளியேறிவிடுங்கள். வெளியிலேயே இருந்துவிடுங்கள். உடனே **9-1-1** ஐ அழையுங்கள்.



உங்கள் வீட்டின் ஒவ்வொரு தளத்திலும், மற்றும் அனைவரும் தூங்குகிற பகுதிகளுக்கு வெளியில், வேலை செய்யும் நிலையில் இருக்கக்கூடிய புகை அலாரத்தை வைத்திருங்கள்.
புகை அலாரங்களை நிறுவுவதும் மற்றும் அதனைப் பராமரிப்பதும் வீட்டு உரிமையாளர்களின் பொறுப்பாகும்.
சொத்துக்கு உரிமையாளர்களும் தாங்கள் வாடகைக்கு விடும் சொத்துக்கள் இந்தச்சட்டத்திற்கு இணங்குகின்றன என்பதை உறுதி செய்ய வேண்டும்.



வாடகை வீட்டில் குடியிருப்பவர்கள் தாங்கள் குடியிருக்கும் பகுதியில் கீழ்க்கண்டவற்றை அறிய வந்தால், அது பற்றி சொத்தின் உரிமையாளருக்கு கட்டாயம் விரைவில் தெரிவிக்கவும்:

- தாங்கள் வாடகைக்கு இருக்கும் வீட்டில் ஒரு புகை அலாரம் துண்டிக்கப்பட்டிருப்பது.
- தாங்கள் வாடகைக்கு இருக்கும் வீட்டில் ஒரு புகை அலாரம்செயல்படவில்லை அல்லது செயலிழந்துவிட்டது.

வாடகைதாரர்கள் புகை அலாரம் செயல்படுவதை முடக்கி வைக்கக்கூடாது. இது சட்டத்திற்கு எதிரானது!



கூடுதல் பாதுகாப்பிற்காக, அனைத்து படுக்கையறைகளிலும் புகை அலாரங்களை நிறுவவும்.



சோதனை பொத்தானை அழுத்தி புகை அலாரங்களை மாதந்தோறும் சோதிக்கவும்.



குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்கு ஒருமுறையோ அல்லது அலாரம் ஒலி குறையும் போதோ பேட்டரிகளை மாற்றவும்.
10 வருடங்களுக்கு கவலையில்லாமல் இருக்கும் வகையிலான லித்தியம் பேட்டரி பொருத்திய அலாரங்களைப் பயன்படுத்துவதைக் கருத்தில் கொள்ளுங்கள்.



10 வருடங்களுக்கு மேலாகிவிட்ட, கடினமாகிவிட்ட/மின்சாரப் புகை அலாரங்களை மாற்றிவிடவும்.



முடிந்தால், ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட புகை அலாரங்களை நிறுவவும் ஒன்று ஒலிக்கும்போது, மற்ற அனைத்துமே ஒலி எழுப்பி, வீட்டின் ஒவ்வொரு மாடியிலும் வசிக்கின்ற குடியிருப்பாளர்களை எச்சரிக்கும்.



ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட புகை அலாரங்களை மாற்றும் போது அந்தக் கட்டமைப்பில் உள்ள அனைத்து அலாரங்களையும் ஒரே சமயத்தில் மாற்றுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. செயலிழந்துவிட்ட ஒரு அலாரத்தை நீங்கள் மாற்ற வேண்டும் என்றால், புதிய அலாரம் ஏற்கெனவே இருப்பவற்றுடன் இணக்கமாக இருப்பதை உறுதி செய்யுங்கள்.



நீங்கள் சமைக்கும் போது உங்கள் புகை அலாரம் அடிக்கடி செயலுக்கு வந்தால், பேட்டரி அல்லது அலாரத்தை அகற்றிவிடக் கூடாது என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்.
அதற்கு பதிலாக, அலாரத்தை மற்றொரு இடத்திற்கு நகர்த்த அல்லது ஒரு ஃபோட்டோ எலெக்ட்ரிக் சாதனம் பொருத்துவது பற்றி பரிசீலியுங்கள்.




காது கேளாதவர்கள் அல்லது காது கேட்பதில் சிரமம் கொண்டவர்கள் பார்வையினால் தெரிந்துகொள்ளும் வகையிலான எச்சரிக்கை செய்கின்ற புகை அலாரங்களை நிறுவுங்கள்.
அத்தகைய சாதனங்கள் பார்வையில் படும்படியான, விட்டு விட்டு பளிச்சிடும் விளக்குகளினால் ஆன எச்சரிக்கைகள், மற்றும் புகை எச்சரிக்கை மணியின் ஒலி, தலையணை அல்லது படுக்கையை அதிர வைக்கும் செயலால் செயல்படுத்தப்படும் சாதனங்கள் ஆகியவை இவற்றில் அடங்கும்.


905.458.5580
bramptonfire.com
firelife@brampton.ca
BramptonFire
@BramptonFireES


BRAMPTON FIRE EMERGENCY SERVICES

# புகை எச்சரிக்கை மணி: அது சட்டப்படியானது

அவற்றை வாங்குங்கள்-நிறுவுங்கள்-சோதியுங்கள்

## எனது புகை எச்சரிக்கை மணியை எங்கு நிறுவுவது?

புகை எச்சரிக்கை மணியை, கூரையிலோ நிறுவுதலுக்கான தயாரிப்பாளரின் அறிவுறுத்தல்களில் கூறப்பட்டபடியோ நிறுவுங்கள்.




புகை அலாரங்கள் கூரையில் அல்லது கூரைக்கு அருகில் அமைக்கலாம், ஆனால் காற்றே இல்லாத இடங்களில் வைக்கலாகாது

தவறான இடத்தில் புகை அலாரத்தை நிறுவினால், புகையை உணரக்கூடிய அதன் தன்மை மற்றும் அதற்கான எதிர்வினை தாமதமாகலாம் அல்லது அலாரத்தை ஒலிக்கச் செய்யாமல் இருந்துவிடலாம்.


905.458.5580
bramptonfire.com
firelife@brampton.ca
BramptonFire
@BramptonFireES


BRAMPTON